## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்

**முன்னிலை.** திரு. கே. திருமால், எம்.ஏ., பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.

2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் நாள் புதன்கிழமை

## அசல் வழக்கு எண்.99/2019

ஷகிலா

.......வாதி

/எதிராக/

1.S.M.ஆமீனா பேகம்
2. S.ஷாகீர் பாஷா

......பிரதிவாதிகள்.

இவ்வழக்கு என்முன்பாக 24.07.2019அன்று விசாரணைக்கு வந்தபோது வாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.வினோதன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதிகள் நீதிமன்றத்திற்கு வராத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். வாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்த பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

வாதிக்கு காஞ்சிபுரம் மாவட்டம் ஒலிமுகமதுபேட்டை சர்வே எண்.3144/3 கொண்ட தெருதிண்ணையின் விஸ்தீரணம் முறையே கிழக்கு மேற்கு 21அடி வடக்கு தெற்கு 5அடி (தெரு திண்ணை தாவாசொத்தில் 1/3 பாக உரிமையும் தாவா சொத்தில் A என்று குறிப்பிட்டுள்ள பகுதி வாய்மொழி ஒப்புதல் மூலம் தாவா சொத்தில் வாதி 04.03.2002 தேதியிலிருந்து தொடர்ந்து ஆண்டு அனுபவித்து வருகிறார் என்றும், தெருத்திண்ணையின் 1/3 பாக உரிமை சார்ந்து

கூட்டு பட்டா எண் R.C.No,695/2017 வாதிக்கு உரிமையான அயிட்டம் 2ல் மற்றும் தாவா வரைபடத்தில் காட்டியுள்ள "A" (1/3 பாகம்) மற்றும் "F" தாவா சொத்திற்கு வாதிதான் முழு உரிமையாளர் என் விளம்புகை பரிகாரம் கோரியும் தாவா சொத்திற்கு பிரதிவாதிகள் மற்றும் அவரின் ஆட்களால் எந்த ஒரு இடையூறும் இல்லாமல் அனுபவிப்பதற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும் தாவா செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டுமென்று அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

## 2. <u>வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>

தாவா சொத்து காஞ்சிபுரம் ஒலிமுகமது பேட்டையில் அமைந்த சர்வே எண்.3144/3 கொண்ட மனைப்பிரிவின் விஸ்தீரணம் முறையே கிழக்கு மேற்கு 21அடி, வடக்கு தெற்கு 60 1/4 அடி என்ற வீட்டு மனைப்பிரிவினை மாகநூர்பீ, S.M,ரஹமத்துல்லா, S.M,ஜைய்த்தூண், S.M,தமீம் அன்சாரி ஆகியோர்களிடமிருந்து பத்திர எண்கள் 414/2002, 2173/2014, 518/ 2017 என்ற வகையில் காஞ்சிபுரம் 1நீ இணைசார் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் மூலம் வாதி சொந்த பணத்தைக்கொண்டு வாங்கிய சொத்துக்கள் ஆகும் என்றும் மேற்படி வாதிக்கு விற்பனை செய்த நபர்களின் வாய்மொழி ஒப்புதல் மற்றும் உறுதிமொழி மூலம் தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெருத்திண்ணையில் 1/3 பாக உரிமையும் இந்த மனைக்கு பின்புறம் உள்ள வாதியின் மொத்த மனைக்கான இந்த மனையின் நாராச பாத்தியம் ஆகியவை வாதிக்கு சொந்தமாகும் என்றும் வாதியின் மனைப்பிரிவின் பொதுவழி நாராச பாத்தியதை கடந்த 2014ம் வருடம் 2173/2014 என்ற பத்திரபதிவின் மூலம் வாதி கிரையம் பெற்றுள்ளார்

என்றும் மேற்படி தாவா சொத்தில் அயிட்டம்1 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது தாவா வரைபடத்தில் "C","D","E","F" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இந்த "A" என்ற தெருத்திண்ணையின் 1/3 பாக உரிமையும் மற்றும் வாதி கிரையம்பெற்றுள்ள "C","D","E","F" என்று தாவா வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.3144/2A1B, 2B, 2A3 ஆகியவற்றிற்கான அனுபவ பாத்தியமும் அதற்கான பட்டாவும் வாதி மீது தாக்கலாகி வாதி குடும்பத்தாருடன் அனுபவித்து வருகிறார் என்றும் இதில் தெருத்திண்ணையின் 1/3 பாக உரிமை சார்ந்து கூட்டு பட்டா எண். R.C.No.695/2017 என்ற வகையில் 14.12.2017 தேதியன்று நகர நில அளவை அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் ஏப்ரல் 2019 முதல் 1ம் எதிர் மனுதாரர் என்பவர் தாவாவில் குறிப்பிட்டுள்ள அயிட்டம் நெம்பர் 2ல் கண்ட வாதி கிரையம் பெற்றுவிட்ட பின்பக்க நாராசம் பகுதியையும் விற்க முயற்சி செய்துவருகிறார் என்றும் மேற்படி தாவாவில் கண்டுள்ள சொத்துக்களின் கிழக்கு மேற்கு 21 அடி மற்றும் வடக்கு தெற்கு 41அடி கொண்ட புழக்கடை பின்பகுதி வீட்டு மனைப்பிரிவின் சர்வே எண். 3144/2A2 ஆகும் என்றும் மேற்படி மனைப்பிரிவினை லேட் ஜலால் சாகிப் மனைவி மாகநூர் பீ அவர்களிடமிருந்து பத்திர எண்.414/2002 தேதி 04.03.2002 முன்னிலைக்கு வாதி கிரையம் பெற்றார் என்றும்

3. மேற்படி தாவாவில் கண்டுள்ள சொத்துக்களின் கிழக்கு மேற்கு 21 அடி மற்றும் வடக்கு தெற்கு 7 1/2 அடி கொண்ட புழக்கடை பின்பகுதி மற்றும் பின்பகுதிக்கான பொதுவழி

நாராச பாத்தியம் உட்பட வீட்டு மனைப்பிரிவின் சர்வே எண்.3144/2A3 ஆகும் என்றும் மேற்படி மனைப்பிரிவினை S.M.ரஹமத்துல்ல, S.M.ஜைய்த்தூண், S.M.தமீம் அன்சாரி ஆகியோர்களிடமிருந்து பத்திர எண்.2173/2014 முன்னிலைக்கு வாதி கிரையம் பெற்றார் என்றும் தாவாவில் கண்டுள்ள சொத்துக்களின் கிழக்கு மேற்கு 21அடி மற்றும் வடக்கு தெற்கு 13 3/4 அடி கொண்ட வீட்டு மனைப்பிரிவின் சர்வே எண்.3144/2A1B, 2B ஆகும் என்றும் மேற்படி மனைப்பிரிவினை S.M.தமீம் அன்சாரி அவர்களிடமிருந்து பத்திர எண் 518/2017 முன்னிலைக்கு வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும் தாவாவில் இணைக்கப்பட்டுள்ள தாவா வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள "B" பகுதியான சர்வே எண் 3144/2A1A கொண்ட நிலப்பரப்பை 1ம் எதிர்மனுதாரர் தன் பெயரில் அவரது கணவர் S.M.ரஹமதுல்லா என்பவரால் ஒரு செட்டில்மேண்ட் பத்திரம் பெற்று அனுபவித்து வந்தார் என்றும் தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெருத்திண்ணையின் கூட்டுப்பட்டாவானது வாருவாய்த்துறை அலுவலரால் அளிக்கப்பட்டு 1ம் பிரதிவாதியின் கணவர் S.M.ரஹமதுல்லா பெயரிலும் வாதியின் பெயரிலும் S.M.ஜைய்த்தூண் என்பவர் பெயரிலும் பெறப்பட்டுள்ளது என்றும் தெருத்திண்ணையின் விஸ்தீரணமானது கிழக்கு மேற்கு 21 அடி மற்றும் வடக்கு தெற்கு 5 அடி ஆகும் என்றும் இந்த தெருத்திண்ணையில் மேற்படி S.M.ரஹமதுல்லா, S.M.ஜைய்த்தூண் மற்றும் வாதிக்கும் 1/3 பாக உரிமை உள்ளது என்றும் கடந்த ஏப்ரல் 2019 அன்று 1ம் பிரதிவாதியானவர் அவருடைய பாகமான சர்வே எண் 3144/2A1A என்ற பகுதியின் 1/2

பகுதியினையும் மற்றும் வாதி ஏற்கனவே கிரையம் பெற்றிருந்த மனைப்பகுதியன் பொதுவழி பாதையையும் தெருத்திண்ணையின் முழுப்பகுதியையும் " தெருவிலிருந்து " என்ற வாக்கியத்தை கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டு 2ம் பிரதிவாதிக்கு மோசடியான பத்திரம் ஒன்றின் மூலம் விற்கனை செய்ய முயன்று அதற்கான பத்திரதையும் காஞ்சிபுரம் 1நீ இணைசார் பதிவகத்தில் தாக்கல் செய்துள்ளதை அறிந்து அதை தடுப்பதற்காகவும் வாதியின் தாவா சொத்தினை பாதுகாத்துக்கொள்ள வேண்டியும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

3. பிரதிவாதிகள் சம்மன் சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றம் வராத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

**4. வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் வழக்கில் கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

5. **பிரச்சனைக்கான தீர்வு**.

தாவா சொத்து காஞ்சிபுரம் ஒலிமுகமது பேட்டையில் அமைந்த சர்வே எண்.3144/3 கொண்ட மனைப்பிரிவின் விஸ்தீரணம் முறையே கிழக்கு மேற்கு 21அடி, வடக்கு தெற்கு 60 1/4 அடி என்ற வீட்டு மனைப்பிரிவினை மாகநூர்பீ, S.M,ரஹமத்துல்லா, S.M,ஜைய்த்தூண், S.M,தமீம் அன்சாரி ஆகியோர்களிடமிருந்து வாதி சொந்த பணத்தைக்கொண்டு வாங்கிய சொத்துக்கள் ஆகும் என்றும் மேற்படி வாதிக்கு விற்பனை செய்த நபர்களின் வாய்மொழி ஒப்புதல் மற்றும் உறுதிமொழி மூலம் தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெருத்திண்ணையில் 1/3 பாக உரிமையும் இந்த மனைக்கு பின்புறம் உள்ள வாதியின் மொத்த மனைக்கான இந்த

மனையின் நாராச பாத்தியம் ஆகியவை வாதிக்கு சொந்தமாகும் என்றும் வாதியின் மனைப்பிரிவின் பொதுவழி நாராச பாத்தியதை கடந்த 2014ம் வருடம் 2173/2014 என்ற பத்திரப்பதிவின் மூலம் வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும் மேற்படி தாவா சொத்தில் அயிட்டம்1 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது "A" என்ற தெருத்திண்ணையின் 1/3 பாக உரிமையும் மந்றும் வாதி கிரையம்பெற்றுள்ள "C","D","E","F" என்று தாவா வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.3144/2A1B, 2B, 2A3 ஆகியவற்றிற்கான அனுபவ பாத்தியமும் அதற்கான பட்டாவும் வாதி மீது தாக்கலாகி வாதி குடும்பத்தாருடன் அனுபவித்து வருகிறார் என்றும் இதில் தெருத்திண்ணையின் 1/3 பாக உரிமை சார்ந்து கூட்டு பட்டா எண். R.C.No.695/2017 என்ற வகையில் 14.12.2017 தேதியன்று நகர நில அளவை அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் ஏப்ரல் 2019 முதல் 1ம் எதிர் மனுதாரர் என்பவர் தாவாவில் குறிப்பிட்டுள்ள அயிட்டம் நெம்பர் 2ல் கண்ட வாதி கிரையம் பெற்றுவிட்ட பின்பக்க நாராசம் பகுதியையும் விற்க முயற்சி செய்துவருகிறார் என்றும் மேற்படி மனைப்பிரிவினை லேட் ஜலால் சாகிப் மனைவி மாகநூர் பீ அவர்களிடமிருந்து பத்திர எண்.414/2002 தேதி 04.03.2002 முன்னிலைக்கு வாதி கிரையம் பெற்றார் என்றும் மேற்படி தாவாவில் கண்டுள்ள சொத்துக்களின் கிழக்கு மேற்கு 21 அடி மற்றும் வடக்கு தெற்கு 7 1/2 அடி கொண்ட புழக்கடை பின்பகுதி மற்றும் பின்பகுதிக்கான பொதுவழி நாராச பாத்தியம் உட்பட வீட்டு மனைப்பிரிவின் சர்வே எண்.3144/2A3 ஆகும் என்றும் மேற்படி மனைப்பிரிவினை

S.M.ரஹமத்துல்லா, S.M.ஜைய்த்தூண், S.M.தமீம் அன்சாரி ஆகியோர்களிடமிருந்து பத்திர எண்.2173/2014 முன்னிலைக்கு வாதி கிரையம் பெற்றார் என்றும் தாவாவில் கண்டுள்ள சொத்துக்களின் கிழக்கு மேற்கு 21அடி மற்றும் வடக்கு தெற்கு 13 3/4 அடி கொண்ட வீட்டு மனைப்பிரிவின் சர்வே எண்.3144/2A1B, 2B ஆகும் என்றும் மேற்படி மனைப்பிரிவினை S.M.தமீம் அன்சாரி அவர்களிடமிருந்து பத்திர எண் 518/2017 முன்னிலைக்கு வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும் தாவாவில் இணைக்கப்பட்டுள்ள தாவா வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள "B" பகுதியான சர்வே எண் 3144/2A1A கொண்ட நிலப்பரப்பை 1ம் எதிர்மனுதாரர் தன் பெயரில் அவரது கணவர் S.M.ரஹமதுல்லா என்பவரால் ஒரு செட்டில்மேண்ட் பத்திரம் பெற்று அனுபவித்து வந்தார் என்றும் தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெருத்திண்ணையின் கூட்டுப்பட்டாவானது வருவாய்த்துறை அலுவலரால் அளிக்கப்பட்டு 1ம் பிரதிவாதியின் கணவர் S.M.ரஹமதுல்லா பெயரிலும் வாதியின் பெயரிலும் S.M.ஜைய்த்தூண் என்பவர் பெயரிலும் பெறப்பட்டுள்ளது என்றும் தெருத்திண்ணையின் விஸ்தீரணமானது கிழக்கு மேற்கு 21 அடி மற்றும் வடக்கு தெற்கு 5 அடி ஆகும் என்றும் இந்த தெருத்திண்ணையில் மேற்படி S.M.ரஹமதுல்லா, S.M.ஜைய்த்தூண் மற்றும் வாதிக்கும் 1/3 பாக உரிமை உள்ளது என்றும் கடந்த ஏப்ரல் 2019 அன்று 1ம் பிரதிவாதியானவர் அவருடைய பாகமான சர்வே எண் 3144/2A1A என்ற பகுதியின் 1/2 பகுதியினையும் மற்றும் வாதி ஏற்கனவே கிரையம் பெற்றிருந்த மனைப்பகுதியன் பொதுவழி பாதையையும் தெருத்திண்ணையின் முழுப்பகுதியையும்

" தெருவிலிருந்து " என்ற வாக்கியத்தை கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டு 2ம் பிரதிவாதிக்கு மோசடியான பத்திரம் ஒன்றின் மூலம் விற்கனை செய்ய முயன்று அதற்கான பத்திரதையும் காஞ்சிபுரம் 1நீ இணைசார் பதிவகத்தில் தாக்கல் செய்துள்ளதை அறிந்து அதை தடுப்பதற்காகவும் வாதியின் தாவா சொத்தினை பாதுகாத்துக்கொள்ள வேண்டியும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

6. வழக்கின் 1ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் மாதிரி வரைபடம் வா.த.சா.ஆ.1 ஆகவும், 04.03.2002 ம் தேதியிட்ட பத்திர எண் 404/12 ன் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் ( சான்றிட்ட நகலில் தெளிவாக காணப்படாததால் அசலின் நகல் இணைக்கப்பட்டடுள்ளது.)வா.த.சா.ஆ.2 ஆகவும், 25.08.2014 ம் தேதியிட்ட பத்திர எண் 2173/2014ன் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.3 ஆகவும், 27.03.2017 ம் தேதியிட்ட பத்தில எண் 518/2017ன் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.4ஆகவும், 13.04.2010ம் தேதியிட்ட தாவா சொத்தின் வில்லங்கச் சான்று (கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்டது) வா.த.சா.ஆ.5 ஆகவும், 25.08.2014 ம் தேதியிட்ட பத்திர எண் 2177/2014 ன் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.6 ஆகவும், 14.12.2017 ம் தேதியிட்ட தாவா சொத்தின் கூட்டு பட்டா மற்றும் மாதிரி வரைபடம் (கணிணி பதிவிறக்கம் வா.த.சா.ஆ.7 ஆகவும், 16.04.2019 ம் தேதியிட்ட காஞ்சிபுரம் 1நீ இணை சார்பதிவகத்தில் எதிர்மனுதாரரின் மோசடி பத்திர

பதிவு சார்ந்த மறுப்புக்கடிதம் வா.த.சா.ஆ.8ஆகவும், 07.05.2019 ம் தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.த.சா.ஆ.9 ஆகவும்,1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.த.சா.ஆ.10 ஆகவும், 2ம் பிரதிவாதி அறிவீப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.த.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டு வாதியின் பெயரில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. இந்நிலையில் வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் தாவா சொத்திற்கு வாதி தான் முழுஉரிமைதாரர் என்பதை மறுதலிக்கும் விதமாக பிரதிவாதிகள் தரப்பில் எந்த ஆவணங்களும் இல்லை. வாதி தரப்பு வாதுரை கேட்டும் வாதிக்கு அவர் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.

8. முடிவில் தாவா சொத்திற்கு வாதி தான் முழுஉரிமைதாரர்கள் என்று விள்புகை பரிகாரம் வழங்கியும் வாதிக்கு உரிமையான தாவா சொத்தில் பிரதிவாதிகள் மற்றும் அவரின் ஆட்களால் எந்த ஒரு இடையூறும் இல்லாமல் அனுபவிப்பதற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது. செலவுத் தொகையில்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ஆம் நாள் புதன்கிழமை அவையறிய பகரப்பட்டது.

ஓ/ப.கே.பெருமாள்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.

**<u>இணைப்பு</u>**

**<u>வாதி தரப்பு சாட்சிகளின் பட்டியல்.</u>**

வா.சா.1. - ஷகிலா (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்களின் பட்டியல் .</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | | தாவா சொத்தின் மாதிரி வரைபடம் |
| வா.சா.ஆ.2 | 04.03.2002 | பத்திர எண். 404/12ன் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் (சான்றிட்ட நகலில் தெளிவாக காணப்படாததால் அசலின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) |
| வா.சா.ஆ.3 | 25.08.2014 | பத்திர எண் 2173/2014 ன் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.4. | 27.03.2017 | பத்திர எண் 518/2017ன் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் . |
| வா.சா.ஆ.5 | 13.04.2010 | தாவா சொத்தின் வில்லங்கச் சான்று (கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்டது). |
| வா.சா.ஆ.6 | 25.08.2014 | பத்திர எண் 2177/2014 ன் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.7 | 14.12.2017 | தாவா சொத்தின் கூட்டு பட்டா மற்றும் மாதிரி வரைபடம் (கணிணி பதிவிறக்கம் ) |
| வா.சா.ஆ.8 | 16.04.2019 | காஞ்சிபுரம் 1நீ இணை சார்பதிவகத்தில் எதிர்மனுதாரரின் மோசடி பத்திர பதிவு சார்ந்த மறுப்புக்கடிதம். |
| வா.சா.ஆ.9 | 07.05.2019 | வாதி பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.10 | -- | 1ம்பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை. |
| வா.சா.த.ஆ11 | -- | 2ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை. |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>: இல்லை.**

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u> : இல்லை.**

ஒ/ப.கே.பெருமாள்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

காஞ்சிபுரம்.